பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (02 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 248

# தென் தமிழீழத்தில் படையினர் முகாம்களில் முடங்கும் நிலை!

## ராணுவ தந்திரோபாயங்களை புலிகள் முறியடித்ததன் விளைவு

யாழ்ப்பாணம், ஆக. 2

தென் தமிழீழத்தில் — குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் — ஸ்ரீலங்கா அரசுப் படையினர் முகாம்களுக்குள் முடங்கும் நிலை உருவாகி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறியவருகிறது.

கிழக்கில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக இராணுவத்தினர் வகுத்த தந்திரோபாயங்களை, புலிகள் முறியடித்து விட்டார்கள். அதனாலேயே இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் சரி, ஏனைய பகுதிகளிலும் சரி ரோந்து செல்வது அல்லது பெரிய தாக்குதல்களை நடத்துவது மிகவும் ஆபத்தான ஒன்றாக இருக்கும் என அஞ்சப்படுகிறது.

அண்மைக் காலங்களில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் பேரிடித் தாக்குதல்களினால் ஸ்ரீலங்காப் படையினர் பெரும் குழப்பமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

ரோந்து செல்லும் படை அணிகள் மீதும், இராணுவ

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கந்தலமவில் ஹோட்டல் கட்ட இடைக்காலத் தடை!

### அப்பீல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஆக. 2

அரசியல் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் தம்புள்ள கந்தலம உல்லாசப் பயண ஹோட்டல் கட்டும் முயற்சிக்கு கொழும்பு மேன்முறையீட்டு [அப்பீல்] நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

கொழும்பிலிருந்து இயங்கும் "சுற்றுச்சூழல் நிறுவனம் ஒன்றின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதே நீதிமன்றம் இந்த இடைக்காலத் தடையை விதித்தது.

நீதியரசர்கள் சரத் என். சில்வா, டி. பி. எஸ். குணசேகரா ஆகியோர் இந்த உத்தரவை விடுத்தனர்.

மனுவில் காணி ஆணையாளர், சுற்றுலாத்துறை துணை அமைச்சர் காமினி அத்துக்கோறளை ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மேற்படி இரு பிரதிவாதி

(5 ஆம் பக்.ம் பார்க்க)

## மலேஷியாவில் எயர்லங்கா விமானம் தடுத்து வைப்பு

கொழும்பு, ஆக. 2

கொழும்பிலிருந்து கோலாலம்பூர் வழியாக சிங்கப்பூர் செல்லவிருந்த ஏயர் லங்காவின் "ட்ரை ஸ்டார்" விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் கோலாலம்பூரில் பலவந்தமாகத் தரையிறக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது.

மலேஷிய நீதிமன்றம் ஒன்று விடுத்த உத்தரவின் பேரில் மலேஷிய அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையினால் அந்த எயர்லங்கா விமானத்தில் பயணம் செய்த 88 பயணிகளும் நிர்க்கதி நிலைக்கு உள்ளானார்கள்.

மலேஷிய நீதிமன்றம் முன்னர் விடுத்த உத்தரவு ஒன்றுக்கு எயர்லங்கா நிறுவனத்தைக் கட்டுப்படச் செய்வதற்காகவே "ட்ரை ஸ்டார்" விமானம் தரையிறக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் பிரகாரம் 115 பயணிகளை ஜெத்தாவுக்கு கொண்டு செல்ல வேண்டிய தனது பணி

[5 ஆம் பக்கம் பார்க்க]

### சித்திரவதைக்கு உள்ளான

## மன்னார் தமிழ் சாரதிக்கு ரூ. 40 ஆயிரம் நஷ்டஈடு!

### உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஆக. 2

எம். எஸ். எப். என்ற பிரேஞ்சு மருத்துவ தொண்டர் நிறுவன சாரதியான மன்னார் கிராண்ட் பஸாரைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை அமிர்தகுமாருக்கு 40 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அவர் மீது மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படாவிட்டால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனுதாரர் தான் மனிதாபிமானமற்ற சித்திரவதை, சட்டவிரோத கைது, மற்றும் தடுத்து வைப்பு மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக தெரிவித்து— இரண்டு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி — வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஓ. சி. குண்டு வெடிப்பு: கைதான வர்த்தகர் விடுதலை

கொழும்பு, ஆக. 2

கூட்டுப் படைத் தலைமையக குண்டு வெடிப்பு தொடர்பாக தகவல் கொடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த புறக்கோட்டை வர்த்தகரான சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் கடந்த புதன் மாலை விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவர் ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும், அபராதமும் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தப்பட்டது. ஆனால் அவர் விடுவிக்கப்படவில்லை.

இதனை ஆட்சேபித்து பாலச்சந்திரனின் மனைவியான சுகந்த மலர் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆள்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதனையடுத்தே அவரின் கணவர் விடுவிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-து)

## திருமலையில் ஊர்காவலர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 2

திருகோணமலை, கொக்குவிழுந்தான் என்ற இடத்தில் நேற்றுக்காலை 7மணியளவில் ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்தார். அவரிடம் இருந்து குழல் துப்பாக்கி ஒன்றையும், இரு தோட்டாக்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

(ஒ)

## 'பரா' வெளிச்ச உதவியுடன் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 2

மண்டைதீவு மற்றும் பூநகரி - கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் 'பரா' வெளிச்சத்தின் உதவியுடன் கண்டபடி தாக்குதல்களை நடத்தினர்.

படையினர் தொடர்ச்சியாக 50 கலிபர் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இரவு வேளைகளில் அடிக்கடி தாக்குதல் நடத்தப்படுவதால் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவில் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

(ஓ-51)

### வடக்கு - கிழக்கில்

## ஓய்வுபெற்ற டாக்டர்களை மீண்டும் நியமிக்க முடிவு

கொழும்பு, ஆக. 2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்காக ஓய்வுபெற்ற டாக்டர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்குவது என சுகாதார அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு இடம் மாற்றம் செய்யப்படும் டாக்டர்கள், அங்கு சென்று பணிபுரிய பின்னடித்து வருகின்றனர் என்றும்—

அதனால் ஏற்படும் நெருக்கடிகளைச் சரிப்படுத்தவே, ஓய்வுபெற்ற டாக்டர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் ஓய்வு பெற்றிருக்கும் டாக்டர்களை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளுமாறு சுகாதார, மகளிர் விவகார, போதனா வைத்திய சாலைகள் அமைச்சர் ரேணுகா ஹேரத் தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ]

### வழக்கம்பரையில்

## பால் மா பைக்கட்டுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன

சுழிபுரம், ஆக. 2

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள—பெரும் எண்ணிக்கையான - "ஹைலண்ட்" பால்மா பைக்கட்டுகள் வழக்கம்பரையில் தீயிட்டு நாசமாக்கப்பட்டன.

வழக்கம்பரை அந்திய காலச் சங்க வளவில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் தீயிடப்பட்ட இப்பால்மா பைக்கட்டுகள், காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமானவையாகும்.

இப்போது வழக்கம்பரையில் இயங்கிவரும் மேற்படி கூட்டுறவுச் சங்கம் அந்திய காலச் சங்கக் கட்டடத்தைத் தனது களஞ்சியமாகப் பயன்படுத்தி வருகிறது.

களஞ்சியத்தில் வைக்கப்பட்ட பால்மா பழுதடைந்ததால், கடந்த பல நாட்களாகத் துர்நாற்றம் வீசியது. இது குறித்து அருகே உள்ள பிரதான வீதி வழியாகச் செல்லும் பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வசம் இருந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

## எமது போராட்டத்தின் தாக்கத்தை உலகு விரைவில் உணர்ந்து கொள்ளும்

### திலீபன் அரங்கில் பாலகுமாரன் பேச்சு

யாழ்ப்பாணம், ஆக. 2

"தமிழீழப் போராட்டத்தின் தாக்கத்தை உலகம் விரைவில் உணர்ந்து கொள்ளும்; தெற்கிலே கொந்தளிப்புகள் ஏற்படும்; இராணுவம் எமது மண்ணிலிருந்து சொல்லாமலேயே வெளியேறும் நிலை வரும்."

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. பாலகுமாரன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையின் யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள திலீபன் அரங்கில் நேற்று இரவு நடந்த மாதாந்தக் கலைவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

[5 ஆம் பக்கம் பார்க்க]

**வானம் தந்திடும் மழை கடலை சென்றடைவது பிழை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருளைக்கிழங்கு விநியோகம்

உரும்பராய் சமநல சேவை நிலைய எல்லைக்கு உட்பட்ட விவசாயிகள் 1992ஆம் ஆண்டு உருளைக் கிழங்கு செய்கையில் ஈடுபட விரும்பின் விண்ணப்பங் களை உரும்பராய் சமநல சேவை நிலையத்தில் 10-08-1992ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ளு மாறு வேண்டுகின்றேன்.

சோ. பரமசிவராசா,
பெரும்பாக உத்தியோகத்தர்.

[22005]

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

## இரசிகமணி கனக. செந்திநாதன் பதினைந்தாவது நினைவு ஆண்டு சிறுகதைப் போட்டி

முதற் பரிசு: — 500 00
இரண்டாம் பரிசு: — 300 00
மூன்றாம் பரிசு: — 200 00
ஆறுதற் பரிசுகள்: — ஒவ்வொன்றும் ரூபா 100-00 பெறுமதியான ஐந்து பரிசுகள்.

★ நிபந்தனைகள் ★

★ சிறுகதைகள் அனைத்தும் எழுதுவோரின் சொந் தப்படைப்புக்களாகவும், முன்னர் எப்பொழுதும் பிரசுரிக்கப்படாததாயும் இருத்தல் வேண்டும்.

★ ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம். கதைகள் ஒவ்வொன்றும் பத்துப் பக்கங்களிற்கு மேற்படாமல் தெளிவான கையெழுத்தில் எழுதப் பட வேண்டும்.

★ எழுத்தாளரின் பெயர், புனைபெயர், முகவரி என் பன தனித்தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

★ நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

★ போட்டி முடிவு திகதி: 30-09-1992

★ கதைகள் பொதுச் செயலாளர், சன்மார்க்க சபை, குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்று முகவரியிடப் பட்டு அனுப்பப்பட வேண்டும்.

க. விஸ்வநாதன்,
பிரசார செயலாளர்.

[21982]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 27-03-1927

இறைவன் அடியில்: 03-07-1992

அமரர்

### சிற்றம்பலம் தணிகாசலம்

(ஓய்வு பெற்ற - சிறைச்சாலை மேற்பார்வையாளர்)

எல்லோர்க்கும் இனியவரே!
எம் இல்லத்தின் ஒளி விளக்கே!
கள்ளமில்லா வெள்ளை நெஞ்சே!
கலங்கி நாம் தவிக்க இங்கே,
கணப் பொழுதில் சென்ற தெங்கே!
மின்னலில்லை, முழங்கலில்லை
புயலுடன் தான் பெருமழையோ!
ஊர் ஊராய் உறவுகள் நாம் அலைந்தாலும்
நெஞ்சமதில்,
உங்கள் நினைவு நீங்காமல் இருக்குதப்பா!
நித்தம் தான் அழுதாலும், புரண்டாலும்,
நிலைத்தவர் யார் இந்நானிலத்தில்!!

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு அஞ்சலி செலுத்தியும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும், மலர் வளையம் சார்த்தியும், நேரில் கலந்து கொண்டும், பல வழிகளில் எமக்கு துணை நின்று எம் துன்பத்தில் பங்குபற்றி உதவி செய்தவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (02-08-1992) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறும் சபிமண்டிரண கிரியைகளின் போதும், அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.

[21283]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 2

நவாலி வடக்கு வளர்மதி சனசமூக நிலையம் மானிப் பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடை பெறும் ஆட்டங்கள் வரு மாறு:-

★ பிற்பகல் 3மணி.- சுன் னாகம் ஸ்கந்தா வி. க. அணி எதிர் கொழும்புத்துறை ஜெட் லைனர் வி. க. அணி

★ மாலை 4மணி:- அல் வாய் நண்பர்கள் வி. க. அணி எதிர் குருநகர் தொடர்மாடி சென். லூக்கஸ் வி. க. அணி

## லூதர் ஜெயசிங்கம் வெற்றிக்கேடயம் ஹாட்லிக்கு

உடுவில், ஆக. 2

பேராசிரியர் லூதர் ஜெய சிங்கத்தின் மூன்றாவது ஆண்டு ஞாபகார்த்த தினத்தையொட்டி யாழ்ப் பாணப் பாடசாலைகளுக் கிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் பேராசிரியர் லூதர் ஜெய சிங்கம் ஞாபகார்த்த வெற் றிக் கேடயத்தையும், வெற் றிக் கிண்ணத்தையும் ஹாட் லிக் கல்லூரி மாணவர் அணி பெற்றுக் கொண்டது.

உடுவில் மகளிர் கல்லூரி யில் கடந்த வியாழன் நடை பெற்ற இப் போட்டியை யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தினர் ஒழுங்கு செய்து நடத்தினர்.

இப் போட்டிகளின் இறுதி போட்டியில் ஹாட்லிக் கல் லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் கலந்து கொண் டன.

போட்டிகளில் வெற்றியீட் டியவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திருமதி ஜே. எம். சிவப்பிரகாசம் வழங்கினார்.

(இ-152)

## Personal New Science Centre
JAFFNA.

### 93 A/L புதிய பகுதிகள்

CHE :- Organic (சேதனஇரசாயனம்)
திரு. செல்வா B. Sc (Hons)

PHY :- Electricity (மின்னியல்)
திரு. ரவீந்திரநாதன் B. Sc (Cey.) Dip-in Ed

PURE.:- வரிசைமாற்றமும் சேர்மானமும்

APP.:- நீர்நிலையியல்
திரு. குணசிங்கம் B Sc. (Hons)

ZOO.:- முளையவியல்
திரு. ஈஸ்வரதாசன் B. Sc. (Cey)

BOT.:- நுண்ணங்கியியல்
திரு. பாலசுப்பிரமணியம்

(நேர அட்டவணை நிறுவனத்தில் பெறவும்)

(சி-2982)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### AL 93/94 கணக்கியல்

புதிய அலகுகள் ஆரம்பம்

சனி, ஞாயிறு
2-3 முடிவுக் க/குகள்

3-4 மாற்றுண்டியல் க/கு

S. K. ஸ்ரீபாகரன்

(2984)

உ
சிவமயம்

யாழ். வண்ணை சிவன் கோவில்

## திருவூஞ்சல்

### 02-08-1992
ஞாயிற்றுக்கிழமை

நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை — மாலை 3.00 மணி.
வசந்தமண்டபப் பூஜை— மாலை 6-00 மணி.
திருவூஞ்சல்
அம்பாள் வீதி உலா — மாலை 7-00 மணி.

### ★ மங்கள இசை ★

| இன்னிசை வேந்தர்கள் | தவில் வித்துவான்கள் |
|---|---|
| திரு. பஞ்சாபிகேசன் | திரு. வீராச்சாமி |
| திரு. பத்மநாதன் | திரு. நித்தியானந்தம் |
| திரு. சிதம்பரநாதன் | திரு. ரவீந்திரன் |
| திரு. கேதீஸ்வரன் | திரு. உதயசங்கர் |
| திரு. பஞ்சமூர்த்தி | திரு. சுதாகர் |
| திரு. நாகேந்திரம் | திரு. முருகதாஸ் |

'பழமுதிர்சோலை',
அம்மன் வீதி,
காரைநகர்.

- விழா உபயகாரர்.

(சி-2983)

உ

நல்லூர் மஹோற்ஸவத்தை முன்னிட்டு

## தெய்வீக அருள் இசைப் பேருரை

விடயம்:- கந்தபுராணம்

இடம்:- நல்லூர் மேற்கு வீதிப் பிள்ளையார் ஆலய மண்டபம்

காலம்:- 03-08-92 தொடக்கம் 25 நாட்கள்

நேரம்:- மாலை 5.30 மணி [தினமும்]

நிகழ்த்துபவர்:- நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன், "கானகதா வாரிதி" கந்தர்மடம்

பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

பக்கவாத்தியம்
திரு. V. K. குமாரசாமி - வயலின்
திரு. T. இராஜன் - மிருதங்கம்
திரு C. நடராஜன் - கெஞ்சரா
பிரம்மஸ்ரீ N. பாரத்வாஜன் - சுருதி

மு. ஒப்பிலாமணி
செயலாளர்,
சைவமகாசபை.

(22013)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்: 26 — 10 — 1953



அன்வியன் பிடியில்: 27 — 07 — 1990

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நடராசா செல்வரெத்தினம்
(செல்வம்)

திதி: 02 — 08 — 1992

நினைவுகளில் நிறைந்தே - எம்மைவிட்டு
நீண்டவழி சென்றிட்ட எங்கள் ஐயா .. ..!
இனியெங்கு உமைக் காண்போம், ஈராண்டல்ல
எத்தனை ஆண்டாயினும் நாம் மறவோம் உம்மை...

பாயில் படுக்கவில்லை - நோயில் அழுந்தவில்லை
நாயினும் கீழான கொடியோரால் மாண்டீரே ...
தாயிலும் மேலாய் எமை காத்து நின்ற தெய்வமே!
உன்வாயினில் அரிசி இடவே வாய்க்கவில்லை எமக்கு

நிலவிழந்த வானமாய் எம் வாழ்க்கை இருளடைய
இலவு காத்த கிளிகளாய் நாம் ஈராண்டாய் ஏமாந்தோம்
மலரெனவே கண்ணீர் காணிக்கை சாத்துகிறோம் - ஈசன்
மலரடியில் நின் ஆத்மா பெற்றிடுக!
சாந்தி! சாந்தி!!

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

மைத்துனர் க. கவிதாஸ்,
பரீஸ் ரெக்ஸ், யாழ்ப்பாணம்.

(5222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் 21 குழுக்கள்

சென்னை, ஆக. 2

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான 21 குழுக்கள் அங்கு இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் குழுக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து தலைவர் பிரபாகரனை தனிப் பெரும் வீரன் என புகழும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் தற்பொழுது புலிகளுக்கு ஆதரவான மாநாடுகளை நடத்துவதற்கு முயற்சி எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

''விடுதலைக் குயில்கள்'' இயக்கம் கடந்த மார்ச் மாதம் சென்னையில் புலிகளுக்கு ஆதரவான மாநாடொன்றை நடத்தியதும் — அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பரவலாக புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கை இடம்பெற்று வருவதும் தெரிந்ததே. (த)

## மட்டு. நாவலடி சம்பவம்:

# ராணுவத் தளபதி நின்ற இடத்துக்கு அருகிலேயே தாக்குதல் நடந்தது!

கொழும்பு, ஆக. 2

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நாவலடிப் பகுதியில் இராணுவ ''டிரக்'' வண்டி ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தின் போது, சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மிக அருகில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினாவும், கிழக்கு பிராந்திய கொமாண்டர் ஜெரி சில்வாவும் இருந்தனர் என்று தற்போது அறிவிக்கப்படுகிறது.

நாவலடிக்கு அருகில் அன்று காலை படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்ற இடத்தை பார்வையிட தளபதி சிசில் வைத்தியரத்தினாவும் மற்றும் அதிகாரிகளும் அங்கு சென்றிருந்தனர்.

இவர்கள் அங்கு சென்ற வேளையில் அப்பகுதியில் கண்ணிவெடிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் — இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், மேலும் மூவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இராணுவ ''டிரக்'' வண்டி கண்ணிவெடிக்கு இலக்கானது குறித்து தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார். (த)

## நஷ்டஈட்டு கொடுப்பனவு

கொழும்பு, ஆக. 2

கொக்கட்டிச்சோலையில் கடந்த வருடம் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பாதிப்படைந்த 187 பேருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகள் நேற்றுக் காலை மட்டக்களப்பு அரச செயலகத்தில் வைத்து அரச அதிபரால் வழங்கப்பட இருந்ததாக அறிவிக்கப்பட்டது. (த)

## 227 பேர் தோற்றுவர்

மன்னார், ஆக. 2

மன்னார் தீவில் பாடசாலை மாணவர்கள் 123 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 104 பேரும் நேற்று ஆரம்பமாகிய ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவர் என்று அறிவிக்கப்பட்டது.

பரீட்சை வினாத்தாள்கள் யு. என். எச். சி. ஆர். மூலம் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டன. (த)

## விசாரணைக் கைதி தப்பினார்!

தமிழ்நாட்டின் எர்ணாகுளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு விசாரணை நிமித்தம் அழைத்துவரப்பட்ட கைதி ஒருவர் காவல் நிலையத்தில் இருந்து தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கையில் விலங்கிடப்பட்ட நிலையிலேயே அக் கைதி தப்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அன்று பணியிலிருந்த 5 காவல்துறையினர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். (த)


## Applications are Called for Short - Term Counselling Training Program

The Association for Health and Counselling calling for applicants who are interested in pursuing an intensive training program in psychological Councelling. The training will take place on weekends and it will be held in English.

Preference will be given to residents of Kilinochchi, Vavunia and Mannar.

Please write or contact:-
''SHANTHIYAHAM''
15, Kachcheri Nallur Road,
Jaffna.
for your application form. The closing date for applications is 20th August 1992

(21998) Executive Director.



உ
சிவமயம்

தாவடி
ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி (முருகமூர்த்தி) கோவில்

★ மஹோற்சவம் ★

[அரை நூற்றாண்டு கால இடைவெளிக்கு பின்]

மஹோற்சவ குரு: பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், சுதுமலை.

★ சிறப்பு உற்சவங்கள் ★

கொடியேற்றம்: ஆடி 20ஆம் நாள் (04-08-1992) செவ்வாய் நண்பகல் 12-06 மணி

சப்பரத் திருவிழா: ஆடி 27ஆம் நாள் (11-08-1992) செவ்வாய் மாலை 6-00 மணி

தேர்த் திருவிழா: ஆடி 28ஆம் நாள் (12-08-1992) புதன் காலை 9-00 மணி தேர்ப்பவனி

தீர்த்தோற்சவம்: ஆடி 29ஆம் நாள் (13-08-1992) வியாழன் காலை 9-00 மணி தீர்த்தம்

திருக்கல்யாண உற்சவம்: ஆடி 30ஆம் நாள் (14 08-1992) வெள்ளி மாலை 5-00 மணி

பெரிய புராணம்
தொடர் சொற்பொழிவு

நிகழ்த்துபவர்: திரு. த. சிவகுமாரன்
(ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி, அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)
தினமும் மாலை 8-00 மணி — 9-00 மணி

- கோவில் நிர்வாகம்.

(21996)



## Practice Makes One Perfect

ஆண்டு - 5
(புலமைப் பரிசில் - 92)
அடுத்த பயிற்சிப் பரீட்சை
02 - 08 - 1992

மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந் நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம். பரீட்சையில் தோற்ற வசதியில்லாதவர்கள் வினாத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

★ Bond — யாழ்ப்பாணம்
★ Selin— இருபாலை
★ Pearl— நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls— சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Paarathy — சித்தன்கேணி
★ Bitsmans — மானிப்பாய்
★ Keen — திருநெல்வேலி
★ Osslo— கச்சேரியடி
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Lukky — சண்டிலிப்பாய்
★ Y.M.C.A. — பருத்தித்துறை

விவரங்களுக்கு:
Examination Unit,
BOND INSTITUTES
யாழ்ப்பாணம்.
[illegible]



யாழ். ஜெய்ப்பூர்
செயற்கைக் கால் தொழிற்சாலை
## பதவி வெற்றிடங்கள்

1. TRAINEE FOREMEN — பயிலுனர் முகாமி
உருக்கு / உலோக / தோல் வேலைகளில் ஓரளவு முன் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சேவை மனப்பான்மை உள்ளவர் விரும்பத்தக்கவர்.
கல்வித் தகைமை:- G. C. E. (O/L) ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்திலும் திறமைச் சித்தி
வயது: 25 — 35 வரை

2. TYPIST CUM CLERK — தட்டெழுத்தாளரும் எழுது வினைஞரும்
ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டெழுத்து நன்கு பயின்ற பெண் ஒருவர் தேவை. அங்கவீனர்களுக்கு திறமைக்கேற்ப முன் உரிமை வழங்கப்படும்.
கல்வித் தகைமை:- G. C. E. (O/L) ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமைச்சித்தி

3. REHABILITATION WORKER (Trainee)
புனர்வாழ்வுப் பணியாளர் (பயிலுனர்)
தாதி அனுபவமுள்ள ஒரு பெண் மேற்படி வேலைக்கு எமது தொழிற்சாலையில் பயிற்சி பெற்று கடமையாற்றத் தேவை.
கல்வித் தகைமை:- G C. E. (O/L)

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 15 - 08 - 1992 க்கு முன் தகுந்த சான்றிதழ்களுடனும் சுய விபரங்களுடனும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்;

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்;

இல. 5, பழைய பூங்கா வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [சி-3003]



ஈராறாண்டுகள் ஆகியதோ!



மாதகல் மண்ணில்: 14 - 11 - 1935
&
காங்கேசன் வீதியில்: 02 - 08 - 1980

அமரர் சு. யோசவ் அன்ரன்

சிங்களவனுடன் சங்காரமாடி
சன்னமதை மார்பிலேந்தி
வீரச்சாவை தழுவிக் கொண்ட
எம் அன்புத் தந்தையே - நீர்
மின்னலாய் மறைந்தாலும், இன்றும்
எம் இதயமதில் வாழ்ந்து எம்மை
வழி நடத்தி வருகின்றீர் - உங்கள்
ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உம் வழி தொடரும்;
மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரன், சகோதரிகள்.

கனால் வீதி,
மாதகல். [22009]



31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 11 — 06 — 1928
மறைவு: 03 — 07 — 1992

அமரர் ஐயம்பிள்ளை தியாகராசா

03-07-1992 ஆம் திகதி கொழும்பில் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் ஐயம்பிள்ளை தியாகராசா அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று [02-08-1992] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அக்கிரியைகளில் கலந்து, அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

11/8, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். [22004]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

முதல் தர லெஜரினாலான வகை - ஈடு Blank உறுதிகள், மாணவர்களுக்கான அறிவுக் களஞ்சியம் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை யாகின்றன. மொத்தமாகப் பெறுவோருக்கு விசேட கழிவு உண்டு, துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், பஸ் நிலையம், சுன்னாகம். [21946]

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை மெத்தக் கடைச் சந்தியில், பிரதான வீதியில், கிழக்குப் பக்கமாக உள்ள 273 ஆம் இலக்கக் கடையும், விநாயக முதலியார் வீதியில் வீடு கட்டுவதற்குகந்த 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. குலவீரசிங்கம், விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை. [5206]

## தாதி தேவை

தாதி பயிலுனர் தேவை. விண்ணப்பிக்கவும்: Dr P. சொர்ணலிங்கம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [22010]

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து சிறிய குடும்பத்திற்கு சமையல் செய்யவும், பராமரிக்கவும் நடுத்தர வயதுள்ள பணிப்பெண் தேவை. தாரமிழந்தவர், குடும்பப் பொறுப்பு அற்றவர் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம். நேரில் வரவும். இல. 8, மருதடி வீதி, யாழ்ப்பாணம். [டொன் பொஸ்கோ பாடசாலை அருகில்] [21981]

## மணமகள் தேவை

கிறிஸ்தவப் பெற்றோர் கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் C. I. M. A. எக்கவுண்டன் மணமகனுக்கு கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் நல்ல அழகும் குணமும் உள்ள 30-32 வயதிற்குள் நல்ல குடும்பத்தில் மணமகளை எதிர்பார்க்கின்றனர். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 427, மே/பா உதயன். [21976]

## மணமகன் தேவை

34 வயதுடைய, அத்தம் 3 ஆம் கால், 7 இல் செவ்வாயுள்ள, அழகிய வங்கிச் சட்டத்தரணியான மணப்பெண்ணுக்கு ஏற்ற மணாளன் தேவை சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும் இல. 853, மே/பா, உதயன் [5213]

இந்து மதத்தைச் சேர்ந்த A/L படித்த, 12 இல் செவ்வாயும், லக்கினத்தில் சந்திரன், சுக்கிரன், கேதுவுமுடைய, நட்சத்திரம்: பரணி 32 வயது பெண்ணிற்கு மணமகன் தேவை. தொடர்பு: வி. ம. நவரத்தினம், [மதவடி] மானிப்பாய் றோட், உடுவில். [4929]

இந்து, உதயச் செவ்வாய், [கிரகபாவம் 60] பூசம் நட்சத்திரமுள்ள 26 வயது Quantity Surveyor சித்தியடைந்த அழகிய மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [21959]

## வகுப்புகள்

City and Guilds of London Institute Part II Quantity Surveying 1993 வகுப்புகள் 05 - 08 - 1992 புதன்கிழமை மாலை 6 30 — 8-30 ஆரம்பமாகின்றன. Measurement திங்கள் - புதன் Estimating and Analysis of Prices செவ்வாய்-வியாழன். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. [21989]

## நல்லினத் தோடை

வளாகத்தியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன் தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு இடம்: துரை ஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர் அல்லது இங்கிலீஸ் பார்மஸி, உரும்பராய். [5198]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை; ஆனந்தா சோதிட நிலையம், 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரம் - தினமும் பி. ப. 2 முதல் 6 வரை. [22007]

உங்கள், உங்கள் குழந்தைகளின் நிகழ்கால, எதிர் கால பலன்களை அறிய நாடுங்கள்! அன்னை ஆதிபராசக்தி, ஸ்ரீதேவி அருள் பெற்ற சோதிடர் அம்பிகைதாஸ் ஸ்ரீகருமாரி சோதிட நிலையம், தும்பளை மேற்கு [ஸ்ரீ சாரதாதேவி ஆச்சிரமம்] தபால்பெட்டிச் சந்தி. பருத்தித்துறை. [21909]

## கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [21904]

## மேல் நீதிமன்றில் விசாரணை!

கொழும்பு. ஆக: 2

மஹியங்கனை கொலை வழக்கில் எதிரிகளான முன்னாள் தொழில் துணை அமைச்சர் லக்ஷ்மன் செனிவிரத்னாவும் மற்றும் 3 பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கை விசாரித்த தெல்தெனிய நீதிவான் திரு. எல்.டி.டி. தெஹிதெனிய இவ்வாறு பணித்துள்ளார். [த]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 14 — 09 — 1918

இறப்பு: 02 — 08 — 1988

### அமரர் சதா ஸ்ரீநிவாசன்


[முன்னைநாள் D. R. O. வும், சட்டத்தரணியும்]

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடுவில். [22008]

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



நீர்வேலி வடக்கு

அமரர்

### நாகலிங்கம் கந்தசாமி

[விற்பனைத் திணைக்கள விசாரணை அதிகாரி]

மலர்வு: 30—12—1935

உதிர்வு: 02—08—1982

திதி: 09—08—1992

வீட்டின் தலைமகனே! நாட்டின்
ஒளிவிளக்கே! - நாம்
கண்ணீர் கடலிலே மிதந்த நாளினை
காலம்மாறினும் எம் உள்ளம் மறக்குமா?
பத்து வருடம் ஆனபின்பும் - எம்
சித்தம் கலங்குதுன் பிரிவை எண்ணி.

உன் பிரிவால் வாடும்;

மனைவி, மக்கள், சகோதரர்கள்
சகோதரிகள், பெறாமக்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள்.

நீர்வேலி வடக்கு. [5211]

## 'உளவளத்துணை நிலையம்' நடத்தும் குறுகிய கால உளவளத்துணை பயிற்சித் திட்டம்

இப் பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி வார இறுதி நாட்களில் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும். கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர்,

"சாந்தியகம்"
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்குக் கடிதமூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி ஆகஸ்ட் 20, 1992 ஆகும்.

[21994] - நிறைவேற்றுப் பணிப்பாளர்.

## 2ஆம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு: 25 — 07 — 1974

உதிர்வு: 25 — 07 — 1990

செல்வன்

### பாலசுப்பிரமணியக்குருக்கள் ரகுநாதசர்மா

சிரார்த்த தினம்: 2-8-1992

ஆண்டு இரண்டு அசைந்தாலும், தலை அசைத்து கதைக்கும் கதையும், வாய்விட்டு சிரிக்கும் சிரிப்பும், கைகாட்டி சொல்லும் சொல்லும் எம் மனம் விட்டு என்றும் அகலாதடா ரகுநாதா! உன்னை மறவோமடா!

உன் ஆத்மாவுக்கு
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்;
திருமதி நா. பாலசுப்பிரமணியக்குருக்கள்
குடும்பத்தினர்.

அரியாலை. [21979]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வானுறங்கும் தெய்வம்



மண்ணகம்: 07 — 10 — 1947

விண்ணகம்: 03 — 07 — 1992

### அமரர் சின்னத்துரை தர்மலிங்கம்

(குலம்)

(பங்காளர் - பாக்கியம் தோட்டம்)

எத்திசையும் ஏற்றமுற எமது வாழ்வில்
ஏணியதாய் நின்றிருந்தாய் என்மை ஈந்தாய்!
புத்தியினால், பொறுமையினால் பொலிவு தன்னால்
பூதலத்தைப் பூம்பொழிலாய் ஈந்த வல்லோய்!
சத்தியமே நித்தியமென் பதை உணர்ந்து
சான்றோர்கள் வகுத்தவழி சாற்றி நின்ற
வித்தகனே! தர்மலிங்கா! விகிர்தன் தாளில்
வீற்றிருக்க விமலனருள் வேண்டுகின்றோம்;

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்;
ச. சி. சேமன் குடும்பத்தினர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

"விஷ்ணு மகால்",
சேமன் வளவு,
கண்டி வீதி, பளை.

வீட்டுக் கிருத்தியம்:- "வளர்மதி இல்லம்",
[31ஆம் நாள்] கண்டி வீதி,
பளை.

(அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்)

[கி-2969]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தெற்கில் விரவும் சலிப்பு!

வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை, தெற்கில் இப்போது பலரும் எடுத்துக் கூறத் துணிந்துள்ளனர். அரசியல் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதை அவர்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

போரில் வெல்ல முடியாது என்று தெரிந்து கொண்டே, அதனை மேடைகளில் கூறிக் கொண்டே, ஜனாதிபதி இராணுவ உயர் அதிகாரிகளின் ஆசை வார்த்தைகளுக்கு எடுபட்டு, கோயில் மாடுபோல அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டினார். ஏன், கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்த அதிகாரங்களை முப்படைத் தளபதிகளுக்கு மாற்றியும் பார்த்தார்.

அப்படிச் செய்தென்ன? விடுதலைப் புலிகளை வெல்வது என்பதோ அல்லது அவர்களைப் பலவீனப்படுத்திப் புறந்தள்ளிவிட்டுத் தமிழர்கள் மீது அவர்களுக்குத் திருப்தி தராத தீர்வு ஒன்றைத் திணிப்பது என்பதோ இயலாத காரியம் என்பதை இப்போது எல்லோரும் புரிந்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது!

யுத்தம் நிறுத்தப்பட்டு, சிங்கள இளைஞர்கள் வீணே பலியாவதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்ற கருத்து சாதாரண சிங்கள மக்களிடையே தோன்றியுள்ளது. போரில் காயமுற்ற சிப்பாய்கள் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து அம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுவதும், பலியான சிப்பாய்களின் சடலங்கள் எடுத்துச் செல்லப்படுவதும் கொழும்பில் அடிக்கடி காணும் காட்சிகளாகி விட்டன. அப்போதெல்லாம் கொழும்பில் சிங்களப் பொதுமக்கள் தலையில் அடித்துக்கொள்வதும், மற்றும் அவர்களது வாய் மூலமான விமர்சனங்களும் போரின் விளைவுகளில் அவர்கள் சலிப்படைந்து விட்டார்கள் என்பதையே காட்டுகின்றன. இந்த நிலை கொழும்பில் மட்டுமன்றி தெற்கின் எல்லாத் திசைகளிலும் விரவி வருகிறது எனலாம்.

ஆனால் இராணுவத் தலைமைப் பீடமோ, அரசியல் தலைவர்களோ சிங்களப் பொதுமக்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டதாக இல்லை. வடக்கிலும், கிழக்கிலும் அடிக்கடி தமக்கு கிடைக்கும் அதிர்ச்சி அதிரடிகளை வெளியே காட்டிக் கொள்ளாது, இராணுவத்திற்கு ஆட்திரட்டி வருகிறார்கள்! ஏழு மாகாணங்களிலும் உள்ள இராணுவ அலுவலகங்களில் நாளாந்தம் நேர் முகப்பரீட்சைகளை மும்முரமாக நடத்துகிறார்கள்.

அது மட்டுமா? போரிடுவதற்குப் பயந்து படையை விட்டு ஓடியவர்களை விசாரணை எதுவுமின்றி எல்லாவித சலுகைகளுடனும் திரும்பச்சேர்க்க முடிவு செய்திருக்கிறார்கள். சர்வதேச இராணுவ ஒழுங்கு விதியை மீறி இப்படி நடக்கிறது!

போரில் தோல்வியை அனுபவித்தாலும், விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று வீம்புத் தனம் காட்ட முயல்கிறது இராணுவ உயர் பீடம். தமிழர்களின் உயிர்களுடன் விளையாடி அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வது போலவே, ஏழைச் சிங்கள இளைஞர்களை பலி கொடுக்கவும் இராணுவ உயர் பீடம் தயங்கவில்லை என்பது புலனாகிறது.

இதற்கு மேலும் அரசும், படைகளும் யுத்தத்தைத் தொடர நடவடிக்கை எடுப்பதைத் தடுக்க வேண்டுமானால், சிங்களப் பொதுமக்கள் யுத்தத்தை நிறுத்துமாறு அரசாங்கம் மீது அழுத்தம் போட வேண்டும். அது மட்டுமல்ல; தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்க்குமாறும் வற்புறுத்த வேண்டும். விண் கற்பனை வாதங்களை விட்டு, யதார்த்தத்தின் அடித்தளத்தில் நின்று நியாயத்துடன் சிந்தித்து அதன் வழி செயற்பட முன்வர வேண்டும். செய்வார்களா?

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஆக. 2

யாழ். மாநகர சபைப் பகுதியில் மூன்றாவது கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடும் திட்டத்தின் இரண்டாவது சுற்று நடவடிக்கைகள் நாளை திங்கள் ஆரம்பமாகின்றன.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் தடுப்பூசி போடப்படும் இடங்கள், நேரங்கள் பற்றிய விவரம் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. அது வருமாறு:-

**திங்கட்கிழமை**

★ காலை 8 மணி —10 மணி :- பங்ஷால் வீதி — டேவிட் வீதி சந்தி, குருநகர்; கிறீன்கிங் ச. ச. நிலையம், மத்தியூஸ் வீதி.

★ முற்பகல் 10. 30 மணி— 12. 30 மணி வரை:- குருநகர் மீன் சந்தை, மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

★ பிற்பகல் 2 மணி — 4 மணி வரை:- பழையபூங்கா வீதி, சுண்டுக்குளி ச. ச. நிலையம், ஸ்ரான்லி வீதி — ஆரியகுளம் சந்தி.

**செவ்வாய்க்கிழமை**

★ காலை 8 மணி — 10 மணி:- கிறீன்பீல்ட் ச. ச. நிலையம்— குருசோ வீதி, ஈச்சமோட்டை ச. ச. நிலையம்.

★ முற்பகல் 10. 30 மணி— 12. 30 மணி :- கொய்யாத் தோட்டம் ச. ச. நிலையம், பாசையூர் மகப்பேற்று நிலையம்.

★ பிற்பகல் 2 மணி — 4 மணி:- எழிலூர் ச. ச. நிலையம் — துண்டி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்றல்.

**புதன்கிழமை**

★ காலை 8 மணி — 10 மணி :- கொழும்புத்துறை பொதுச் சந்தை, கொழும்புத்துறை மேற்கு ச. ச. நிலையம்.

★ முற்பகல் 10. 30 மணி— 12. 30 மணி:- கொழும்புத்துறை செபமாலை மாதா கோவில், துரையப்பா ச. ச. நிலையம்.

★ பிற்பகல் 2 மணி — 4 மணி;- கொழும்புத்துறை வளன்புரம் ச. ச. நிலையம், திலீபன் நகர் ச. ச நிலையம். [உ-5]

## தென்தமிழீழத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலைகள் மீதும் விடுதலைப் புலிகள் அண்மைக் காலத்தில் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

கடந்த மாதத்தில் மட்டும் தென்தமிழீழத்தில் 60க்கும் மேற்பட்ட படையினர் புலிகளின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளனர் என்பதும் — 70க்கும் மேற்பட்ட நவீன ஆயுதங்களையும், வேறு பல இராணுவத் தளபாடங்களையும் புலிகள் அக்காலப் பகுதியில் அங்கு கைப்பற்றியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென் தமிழீழத்தில் அண்மைக் காலங்களில் படையினரின் காவல் நிலைகள் அதிகரிக்கப்பட்டும், முகாம்களில் துருப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டும் இருந்தன.

அதே சமயம் படையினர் ரோந்து செல்லும் பாதைகளிலும் அடுத்தடுத்து காவல் நிலைகள் அமைக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு நிலையை ஸ்திரப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

இந்தப் புதிய இராணுவத் தந்திரோபாயங்களின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் மேற்படி பகுதிகளில் துணிகரமாக ஊடுருவி அதிரடித் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தனர்.

கடந்த மாதங்களில் புலிகள் போராளிகளின் அதிரடித் தாக்குதல்கள் என்றும் இல்லாத வகையில் தென்தமிழீழத்தில் அதிகரித்தன.

படையினர் மத்தியில் மனச் சோர்வும், அச்சமும் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகவே படையினர் முகாம்களுக்குள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர். (அ-ஓ)

## மலேஷியாவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிலிருந்து எயர்லங்கா நிறுவனம் தவறியது என்றும்—

அதற்காக 2 லட்சம் டொலரை ''மெறியா டிரவல்ஸ்'' என்ற மலேஷிய நிறுவனத்துக்கு நஷ்ட ஈடாக எயர்லங்கா நிறுவனம் வழங்க வேண்டும் என்றும் மலேஷிய நீதிமன்றம் முன்னர் தீர்ப்பு வழங்கியிருந்தது.

அந்தத் தீர்வுக்கு எயர்லங்கா நிறுவனத்தைக் கட்டுப்படச் செய்வதற்காகவே, அந்த நிறுவனத்தின் விமானம் ஒன்றை தளத்தில் இறக்கி தடுத்து வைக்குமாறு மலேஷிய நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

மலேஷியாவில் தடுத்து வைக்கப்பட்ட விமானத்தை விடுவிக்கும் முயற்சியில் எயர்லங்கா சட்டத்தரணிகள் ஈடுபட்டிருப்பதாகவும்—

நஷ்டஈடு கட்டும்படி நீதிமன்றம் விதித்த தீர்ப்புக்கு எதிராக முறையீடு செய்யப்பட்டிருப்பதாகவும்—

அந்த முறையீடு மீதான விசாரணை ஆகஸ்ட் 5ஆம் திகதி இடம்பெறவிருப்பதாகவும் எயர்லங்கா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [உ-ஓ]

# இன்று

சுழிபுரம், ஆக. 2

பண்ணாகம் அண்ணா கலை மன்ற சிறுவர் பாடசாலையின் இருபதாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு விசவத்தனை ஆலய வீதியில் நடைபெறும். பிரதம விருந்தினராக பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் திரு. கா. நடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி செ. வைத்தியலிங்கம், திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், செல்வி நேசம்மா இராமலிங்கம், வைத்திய கலாநிதி செல்வி கலாவதி சபாநாயகர் ஆகியோர்களும் பங்கு கொள்வர். (உ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 2

நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவ காலத்தில் பணிபுரியும் சென் ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவு உறுப்பினர்களுக்கான — உற்சவகால சேவை நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல் வழங்குவதற்கான — விசேட கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு லங்கா ஆயுள்வேத கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

# அரச திணைக்களம் போல் தெரிவுக்குழு மாறிவிட்டது.

## பேராசிரியர் ஒருவர் விமர்சனம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தற்போது ஓர் அரசாங்கத் திணைக்களம் போலாகி விட்டது. எனவே அதிலிருந்து உருப்படியான முடிவு எதையும் எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-10)

# எமது போராட்டத்தின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த மண்ணில் இன்னமும் நம்பிக்கையோடு வாழ்கிற ஒவ்வொரு தமிழனின் இருப்பும் போராட்டத்துக்கு உதவுகிறது. போராட்டத்துடன் மறைமுகமாக அவனை இணைக்கிறது.

ஆனால் இங்கிருக்கின்ற ஒவ்வொருவரும் போராட்டத்தின் அவசியத்தை சிந்தித்துச் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படும் போது போராட்ட வெற்றிக்கனி எங்கள் கையில் கிடைக்கும்.

**அரசியல் மயமான நடவடிக்கையாக மாறும்**

போராட்டத்தின் இராணுவ மயமாக்கப்பட்ட நடவடிக்கைகளில் பங்கு கொள்ள நீங்கள் தயங்குகிறீர்கள். இராணுவ மயமான நடவடிக்கைகள் வெகு விரைவிலேயே அரசியல் மயமான நடவடிக்கையாக மாறும். அப்போது அதன் பெறுமதியை புரிந்து கொள்வீர்கள். அரசியல் நோக்கை அடையவே இராணுவ மயமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனது சொந்த நிலத்தில் வேர் ஊன்றிப் போராடும் இனமே உலக வரலாற்றில் வெற்றி பெற்றுள்ளது. அந்நியரை நம்பிய போராட்டங்கள் இடைநடுவே கைவிடப்பட்ட சம்பவங்கள் வரலாற்றில் உள்ளன. உலகம் மோசமானது. எந்த நாடும் தனது சுய நலத்திற்காக - இலாபத்திற்காக - எப்படியும் நடந்து கொள்ளும்.

**வரலாறு பிறப்பித்த போராட்டம்**

இந்த நூற்றாண்டின் மகத்தான தேசிய இன உணர்வினால் எழுந்தது எங்கள் போராட்டம். வரலாறு பிறப்பித்த இந்தப் போராட்டத்தில் — போராட்ட இயக்கத்தில் பங்காளிகளாக இருப்பதே மகத்தான பெருமையாகும்.

எல்லாவகையான நிகழ்வுகளையும், துன்பங்களையும் தாங்கும் மனநிலையை நாம் பெற்றுவிட்டோம். ஆனால் அதுவே சில சமயம் எங்களை செயலற்றவர்களாக மாற்றி விடக் கூடும்.

அரசியல் ரீதியான சிந்தனையும், விவேகமும் கொண்ட மக்கள் கூட்டமாக நாம் மாற வேண்டும்.

முதலில் போராட்டம் தொடர்பான தெளிவான கருத்து ஒன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**இராணுவம் வெளியேறும்**

இந்தப் போராட்டத்தின் தாக்கங்கள் விரைவில் உலகில் உணர்ந்து கொள்ளப்படும்; தெற்கிலே கொந்தளிப்புகள் ஏற்படும்; இராணுவம் எமது மண்ணில் இருந்து சொல்லாமலே வெளியேறும் நிலை வரும்.

இரவோடு இரவாக இளைஞர்களைக் கொன்று விட்டு, ஜே. வி. பியை நசுக்கிய பெருமைக்குரிய இராணுவ அதிகாரிகள் இங்கும் அவ்வாறு செய்ய நினைக்கிறார்கள்.

மக்களிடையே உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்த விழைகிறார்கள்.

இன்று கொழும்பிலே தமது அலுவலகங்களை வைத்துள்ள தமிழ் இயக்கங்கள் தமிழீழக் கோரிக்கையை தாம் கைவிட்டு விட்டதாக அறிவித்துள்ளன. எப்படியாவது சிங்கள அரசுடன் பேசிப் பேசி எமதுரிமைகளைப் பெறுவோம் என்கின்றனர் — என்றார் திரு. பாலகுமாரன்.

யாழ். மாவட்டச் செயலகத் தொழிற்சங்கப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இமையவன் தலைமையில் நடந்த விழாவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக உதவிப் பொறுப்பாளர் திரு. தேவர், மகளிர் முன்னணியின் யாழ். மாவட்ட துணைப் பொறுப்பாளர் செல்வி சுகுணா ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

''காணி நிலம் வேண்டும்'' என்னும் நாடகம் விழாவில் மேடையேற்றப்பட்டது. [ஓ-5]

# ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 2

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு வடமராட்சிப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

## பால்மா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

14 லட்சம் ரூபா பெறுமதியான 40 ஆயிரம் பால்மா பைக்கட்டுகள் (லக்ஸ்பிறே, ஹைலன்ட், விட்ட ஸ்பிறே) கடந்த ஜூன் மாதம் கடைசி வாரத்தில் எரித்து நாசமாக்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

இவை நிவாரணமாக வழங்குவதற்கெனக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்பப்பட்டவையாகும். (அ-28)

## கந்தலமவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களும் ஹோட்டல் கட்டுவதற்குரிய காணியை குத்தகைக்கு வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்தே நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இரு பிரதிவாதிகளுக்கும் நோட்டீஸ் உத்தரவு வழங்கவும்—

அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்க ஆகஸ்ட் 18 வரை கால அவகாசம் வழங்கவும் நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதியான ஐட்கின்ஸ் ஸ்பென்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. என். சொக்ஸி ஆஜரானார்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எச். எல். டி. சில்வா ஆஜரானார். [உ-த]

# ஒலிம்பிக் போட்டி முடிவு

லண்டன், ஆக. 2

ஒலிம்பிக் பந்தயங்களில் நேற்று முன்தினம் வரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின்படி, முன்னணி வகிக்கும் நாடுகள் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண் |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 21 | 12 | 13 |
| அமெரிக்கா | 14 | 15 | 14 |
| ஜேர்மனி | 11 | 10 | 11 |
| சீனா | 08 | 12 | 05 |
| ஹங்கேரி | 08 | 05 | 02 |
| அவுஸ்திரேலியா | 05 | 08 | 05 |
| தென் கொரியா | 05 | 03 | — |
| ஸ்பெயின் | 04 | — | — |
| போலந்து | 03 | 04 | 03 |
| ஜப்பான் | 03 | 02 | 05 |
| கனடா | 03 | 01 | 03 |
| பிரான்ஸ் | 02 | 03 | 09 |
| இத்தாலி | 02 | 03 | 05 |
| பிரிட்டன் | 02 | 03 | 02 |
| கியூபா | 02 | 02 | 04 |
| துருக்கி | 02 | 01 | — |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| ருமேனியா | 01 | 02 | 04 |
| செக்கொஸ்லேவேகியா | 01 | 01 | 01 |
| நோர்வே | 01 | 01 | — |
| எஸ்தோனியா | 01 | — | — |
| கிரேக்கம் | 01 | — | — |
| சுவீடன் | — | 03 | 03 |
| நியூசிலாந்து | — | 02 | 02 |
| நெதர்லாந்து | — | 01 | 05 |
| இஸ்ரேல் | — | 01 | 01 |
| பெரு | — | 01 | — |
| லத்வியா | — | 01 | — |
| சுயேச்சை [யூகோஸ்.] | — | — | 02 |
| பெல்ஜியம் | — | — | 01 |
| பின்லாந்து | — | — | 01 |
| [illegible] | — | — | 01 |
| [illegible] | — | — | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெழு கிளானைப்பதி
ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் கோவில்
# பூங்காவனத் திருவிழா

02 - 08 - 92 ஞாயிற்றுக்கிழமை இரவு
விசேட நிகழ்ச்சியாக
"வில்லிசைக் கலா பூபதி" "கலைமாமணி"
எஸ். எஸ். சர்மா அவர்களின்
ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வழங்கும்

## "பக்த அநுசூயா"

என்னும் பொருள் பற்றி வில்லிசை நடைபெறும். அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பூங்காவன உபயகாரர்.

[22015]

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம்-வரையுள்ளது

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | | சம்பள அளவுத் திட்டம் | வயது எல்லை |
|---|---|---|---|
| 1. கிளை முகாமையாளர் | 208.11 | 805 — 1260 / 25x7, 35x8 | 25—40 |
| 2. எழுதுநர் | 302.13 | 730 — 1055 / 20x10, 25x5 | 20—40 |
| 3. காசாளர் | 306.11 | 805 — 1260 / 25x7, 35x8 | 20—40 |

விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் முடிவுத் திகதி:- 10-08—1992.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி:- 12—08—1992.

சங்கப் பணியாளர்கட்கும், சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கட்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெறப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

மேலதிக விவரங்கட்கு 291, ஸ்ரான்லி வீதியில் இருக்கும் எமது தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
1-8-92.


- பொது முகாமையாளர்

[சி/3005]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

மலர்வு:
03 - 09 - 1923

உதிர்வு:
03 - 07 - 1992



## அமரர் தம்பையா செல்லத்துரை
(சட்டத்தரணி)

எங்கள் குலவிளக்காய், அனைவருக்கும் நல்லவராய், யாவரும் ஒரே குலம் என்ற உள்ளத்துடனும், அன்பை அடிப்படையாகக் கொண்ட அரிய கருத்துக்களுடனும் வாழ்ந்து, இறைவனடி சேர்ந்துவிட்ட தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி, பல வழிகளிலும் எங்களுக்கு ஆவன செய்த அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் வழங்கி அவரின் நினைவு மலரை நிரப்பியவர்களுக்கும், மேலும் அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்ற இருப்பவர்களுக்கும், அன்பான அயலவர்களுக்கும், எமது உளம் கனிந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

அம்பி கோட்டம்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

பிரிவால் வாடும்,
மனைவி, சுற்றம்.

(22017)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 328/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உற்சவங்கள்

ஏழாலை, ஆக. 2
ஏழாலை கருணாகரப் பிள்ளையார் மடாலயத்தின் விசேட வைபவங்கள் இன்று ஞாயிறு காலை ஆரம்பமாகி எதிர் வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறும். [த-சி]

★ ★ ★

மயிலணி, ஆக. 2
கன்னாகம் குராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். தேர்த்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும். (த-89)

★ ★ ★

அளவெட்டி, ஆக. 2
அளவெட்டி வெளிவயல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்களுக்கு தொடர்ந்து நடைபெறும். [உ]

## பேச்சுக்கள் தொடர வேண்டுமாம்!

கொழும்பு, ஆக. 2
கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ் உடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கூறினார். [த]

## மன்னார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, பிரியந்த பெரேரா, பி இராமநாதன் ஆகியோர் நஷ்ட ஈடு வழங்கும் உத்தரவை விதித்தனர்.

மனுதாரரான அமிர்த குமார் [31 வயது] 1990 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார். இராணுவச் சோதனை சாவடியில் இருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு பலத்த சித்திரவதைக்கு ஆளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் அவருக்கு சிகிச்சையளித்த இராணுவ டாக்டர் அவருக்கு 75 ஊசிகளைப் போட்டுள்ளார்.

1991 ஜனவரி 29 ஆம் திகதி கப்பலில் கூட்டிவரப்பட்ட அவர் புதிய மகஸின் சிறைச்சாலையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்,

அவரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனு தொடர்பாக, சட்ட வைத்திய அதிகாரிகளின் அறிக்கைகளை நீதிமன்றம் கோரியிருந்தது.

அந்த அறிக்கைகளைப் பரிசீலனை செய்த நீதிமன்றம் — மூன்று வைத்திய அறிக்கைகளின் படி மனுதாரருக்குப் பயங்கர காயங்கள் ஏற்பட்டிருப்பது புலனாகிறது; அவரின் இரண்டு பெருவிரல்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் அவருக்கு 40 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்—என்று உத்தரவிட்டது.

எதிர்காலத்தில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டால், அவர் மன்றில ஆஜர் செய்யப்படும் சமயம், நீதிபதியின் அறையில் அவர் நிறுத்தப்பட்டு, காவலில் இருந்த வேளை காயங்கள் எப்படி ஏற்படுத்தப்பட்டன என்பது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது.

இந்த வழக்கில் மன்னார் இராணுவச் சோதனை தடை முகாம் பொறுப்பாளரான லெப்டினன்ட், இராணுவத் தளபதி, தள்ளாடி இராணுவ தடுப்பு முகாம் கமாண்டர், அதே முகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் வீரசூரிய, கோப்ரல் தலுவத்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். [உ-கு]

இதுவரை நியமனம் கிடைக்காதோரை
# திரும்பவும் விண்ணப்பிக்க அரச அதிபர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஆக. 2
கடந்த பெப்ரவரி மாதத்தில் நடந்த அமைய எழுதுநர்களுக்கான பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு, இதுவரை நியமனம் கிடைக்காதவர்களுக்கு—

இனிமேல் செய்யவுள்ள வாய்ப்புள்ள நியமனங்களை யிட்டு எவ்வித உத்தரவாதமும் தரப்படவில்லை.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்றுப் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெளிவுபடுத்தி உள்ளார்.

இதுவரையில் எவ்வித நியமனக் கடிதங்களும் வழங்கப்படாதவர்களை அடுத்த மாதம் நடக்கவுள்ள பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு அரச அதிபர் அந்த அறிக்கை மூலம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பெப்ரவரியில் நடைபெற்ற பரீட்சையில் திறமை வரிசையில் தெரிவான 304 பேருக்கும் முற்றாக நியமனம் வழங்கப்படுமெனக் கருத்தில் கொள்ளவேண்டியதில்லை. இதுவரை திறமை வரிசைப் படி 145 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு மேலும், 81 பேர் அடுத்த வாரமளவில் நியமனம் பெறும் வாய்ப்புள்ளவர்களாக இருப்பர். எவ்வாறெனினும் இனிமேல் செய்ய வாய்ப்புள்ள நியமனங்களையிட்டு எவ்வித உத்தரவாதமும் தரப்படவில்லை என்பதை உரியவர்கள் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். —என்று அரச அதிபர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். [அ]

## தமிழ் கற்பித்தல் குறித்துப் பேருரை

யாழ்ப்பாணம், ஆக. 2
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவில் "தமிழ் கற்றல், கற்பித்தலில் சில புதிய பரிமாணங்கள்" என்ற தலைப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி நாளை பேருரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பி. ப. 3 30 மணிக்கு ஆரம்பமாகும் இப் பேருரையில், அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆசிரியர் சங்க மாநாட்டில் தமக்கு ஏற்பட்ட மனப் பதிவுகளை பேராசிரியர் வெளிப்படுத்துவார்.

இப்பேருரை கருத்தரங்காகவும் அமையவுள்ளதால் தமிழ் மொழிப் பாடச் சேவைக்கால பயிற்சி ஆலோசகர்கள், தமிழ்த்துறை சார்ந்த ஆர்வலர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் பகுதித் தலைவர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (அ-த)

# அவசர தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிக்கு (வாட் நம் - 3] இரத்தம் பி - நெகடிவ் (B - NEGATIVE) அவசரமாகத் தேவைப்படுகின்றது. இந் நோயாளியின் நலனைக் கருதி இரத்தம் கொடுத்துதவ முன் வரும்படி தயவாக கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்,
தி. விஸ்வநாதன்
மாரியம்மன் லேன்,
[சென்றல் நர்ஸிங்ஹோம் அருகாமையில்]
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [சி-3006]

# எழுதுவினைஞர் சேவை

செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள
## போட்டிப் பரீட்சைக்கான
## துரித பயிற்சி வகுப்புகள்

திங்கள். புதன்
ஆரம்பம்: 03 - 08 - 1992 2-00 மணி
பாடங்கள்: மொழிப்பயிற்சி, தகுதித் தேர்வு, கணக்குப் பதிவு

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ பிரபல விரிவுரையாளர்கள்
★ குறைந்த கட்டணம்

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd. Cross St, JAFFNA.

[சி-3004]

# மரண அறிவித்தல்

## திருமதி சி. மாகிறட்ராணி

திருமதி சி. மாகிறட்ராணி காலமாகி விட்டார். இவர் மல்லாகத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னராசா அவர்களின் மனைவியும், சி. சூரியாவின் அன்புத் தாயாரும், ஈ. ஆர்ரு திருச்செல்வத்தின் சகோதரியும், திருமதி சந்திரா திருச்செல்வத்தின் மைத்துனியும் ஆவார் அன்னாரது இறுதிச் சடங்குகள் 981, வளன்புரத்தில் உள்ள எமது இல்லத்தில் இன்று ஞாயிறு [2-8-92] பி. ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ். புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லடக்கம் தவிர்க்கமுடியாத காரணத்தால் முன்னர் அறிவித்தபடி நேற்று இடம்பெறவில்லை.

தகவல்:
ஜோ. ஆ. நவரட்ணம்.

981, வளன்புரம்,
கொழும்புத்துறை.

[22016]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org